கலிஃபோர்னியாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வட அமெரிக்க தமிழ்ச் சங்கம் ஒருங்கிணைத்திருந்த FITEN(FETNA INTERNATIONAL TAMIL ENTREPRENEUR NETWORK) நிகழ்வில் கலந்துகொண்டு தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் அந்நாட்டு தமிழர்களுடன் கலந்துரையாடினார். குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய பங்கினை எடுத்துரைத்து, "நம்ம ஸ்கூல் பவுண்டேஷன் திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளிகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக தமிழ் தொழில் முனைவோர்கள் சேவையாற்ற முன்வர வேண்டும் என அழைப்பு விடுத்தார். இந்நிகழ்வில் மாநில வளர்ச்சி கொள்கை குழு துணை தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன் அவர்களும், சாகித்திய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர் இமையம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

7 ரயில்களில் குளிர்சாதன வசதியுடைய பெட்டிகள் அதிகரிப்பு!

சென்னை,ஜூலை.5- தமிழ்நாட்டில் இருந்து செல்லும் 7 விரைவு ரயில்களில் குளிர்சாதன வசதியுடைய பெட்டிகளை தெற்கு ரயில்வே கூடுதலாக இணைத்துள்ளது.

கூடுதலாக இணைக்கப்படும் குளிர்சாதன வசதியுடைய பெட்டிகளுக்கு பதிலாக ரயில்களில் உள்ள முன்பதிவில்லா பெட்டிகள் நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் பெட்டிகளில் செய்யப்பட்டுள்ள புதிய மாற்றங்கள் இம்மாத இறுதி மற்றும் ஆகஸ்ட் தொடக்கத்தில் அமலுக்கு வரும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

ஹாங்காங் அயலக கழக உடன்பிறப்புகள் சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு 100 காணொலிக் கூட்டங்கள்!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

ஹாங்காங், ஜூலை 6 - முத்தமிழறிஞர் கலைஞர் அயலக உடன் பிறப்புகள் குழுவினரால் காணொலிக் காட்சி வாயிலாக கலைஞர் நூற்றாண்டு 100 கூட்டங்கள் நடைபெறவுள்ளது, முதல் காணொலிக் கூட்டத்தை துவக்கி வைத்து, ஹாங்காங் அயலக கழக உடன் பிறப்புகள் சார்பில் கலைஞர் அவர்களின் 100 பொன் மொழிகள் மற்றும் வாழ்க்கை குறிப்புகள் புத்தகத்தை வெளியிட்டு அயலக தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உரையாற்றினார்.

அவர் தமது உரையில், நவீன தமிழகத்தின் சிற்பி, திராவிட மாடலின் செயல், பல்துறை சாதனைகள், நாடு போற்றும் மக்கள் பணி, சமூக பணி, மொழி பணி, இயக்கப் பணி, கலை பணி என தலைவரின் பல்வேறு தலைப்புகளின் கீழ் காணொலிக் காட்சி மூலம் 100 கூட்டங்கள் நடைபெறவுள்ளது,

இன்று முதல் கூட்டத்தை துவக்கி வைத்து சிறப்புரை யாற்றுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன், அயலக தமிழர்கள், கழக அயலக உடன் பிறப்புகள் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழை உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் அறியும் வகையில் செயல்பட வேண்டும், வருங்காலத் தலைமுறையினர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்றுச் சாதனைகளைப் போற்றும் வகையில் அவரின் பெருமைகளை உலகம் முழுவதும் பரப்ப வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

"கடல் கடந்து வாழும் தமிழர்களிடம் கலந்துரையாடியது மன நிறைவைத் தருகிறது, வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த நம் தொப்புள் கொடி உறவுகளுக்கு நன்றி" எனச் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் வாஷிங்டன் சிவா வரவேற்புரையாற்றினார், ஒருங்கிணைப்பாளர் லண்டன் செந்தில்குமார், இணை ஒருங்கிணைப்பாளர் ஹாங்காங் விக்ரம் சதீஷ் மற்றும் நிர்வாகிகள் அமெரிக்கா பாண்டி மதி, மலேசியா ஹமீது, ஓமன் தமீம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

அக். 17 முதல் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கலாம்!

மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை!

நாமக்கல், ஜூலை 6 - அக்டோபர் 17 முதல் நவம்பர் 30 ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்யலாம் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. கழகத் தோழர்கள் இதனை பயன்படுத்தி புதிய வாக்காளர்கள் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்திட வேண்டுமென நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,01.01.2024 ஐ தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் கீழ்காணும் அட்டவணையின்படி அறிவித்துள்ளது. அதன்படி வாக்குச்சாவடி நிலைய அலுவலர் 21.07.2023 முதல் 21.08.2023 வரை வீடு வீடாக வந்து வாக்காளர் பட்டியலை சரிபார்ப்பர்.

வாக்குச் சாவடிகளை திருத்தி அமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல், வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண்பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் உள்ள மங்கலான, மோசமான, தரமற்ற படங்களை மாற்றி நல்ல தரமான புகைப் படங்களை 22.08.2023 முதல் 29.09.2023 வரை செய்யப்படும்.

இதைத்தொடர்ந்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் 17.10.2023 அன்று வெளியிடப்படும்.

17.10.2023 முதல் 30.11.2023 வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பது, நீக்கம், திருத்தம் செய்ய வேண்டிய விண்ணப்பங்கள் பெறப்படும். இந்த விண்ணப்பங்களை அலுவலக வேலை நாட்களில் வாக்குச்சாவடி நிலைய அலுவலர் அல்லது வாக்காளர் பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம்.

சிறப்பு முகாம் குறித்த தகவல் பின்னர் தெரிவிக்கப்படும்.

புதிதாக பெயர் சேர்க்க, நீக்கம்செய்யவிண்ணப்பம் அளித்தவர்களை புதிய வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி 26.12.2023 க்குள் முடிவடையும். இதைத் தொடர்ந்து 05.01.2024 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

வாக்காளர் பட்டியலில் புதியதாக பெயர் சேர்க்க 18 முதல் 25க்கு கீழ் உள்ள மனுதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயம். www.voters.eci.gov.in / http://voterportal.eci.gov.in ஆகிய இணையதள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

01.01.2024, 01.04.2024, 01.07.2024, மற்றும் 01.10.2024 ஆகிய தேதிகளில் 18 வயது பூர்த்தியடைபவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும் பெயர் சேர்க்க படிவம் 6 ல் விண்ணப்பிக்கலாம்.

எனவே மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) விரைந்து இப்பணியினை முடித்திட வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ்!

ம.ரா.வின் பாராட்டும் கருத்துரையும்!

முரசொலி கலைஞர் சிறப்பிதழ் பார்த்தேன்.

மாதம்தோறும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் சாதனைகளும் அவருடைய சிந்தனைகளும் அணிவகுப்பாக வந்துகொண்டிருக்கின்றன. வடிவமைப்பும் சிறப்பாக உள்ளது. ஒவ்வொரு துறை சார்ந்தும் கலைஞர் கொண்டாடப் படுவதற்கான காரணங்களை அத்துறை சார்ந்தவர்களே கூற மற்றவர்கள் அறிய நல்வாய்ப்பினைத் தருகிறது சிறப்பிதழ். நன்றி கலந்த பாராட்டுகள்.

இன்று (ஜூலை 3) வந்த சிறப்பிதழில் இடம்பெற்றிருக்கும் படங்கள் ஒவ்வொன்றும் கலைஞர் அவர்களைப் பற்றிய நினைவுகளைக் கிளறி விடுகின்றன.

முனைவர்
ம.இராசேந்திரன்
மேனாள் துணைவேந்தர்
தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு திருச்சி எடத்தெரு ஜெபமாலை மாதா மக்கள் மன்றத்தில் நலிந்த நெசவாளர்களுக்கு உதவி செய்யும் நிகழ்வு நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் சுந்தர்ராஜன் மற்றும் மாநகர அமைப்பாளர் பெஞ்சமின் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக மாநில நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.பா. சச்சிதானந்தம், திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் ஆகியோர் கலந்துகொண்டு நலிவுற்ற நெசவாளர்களுக்கு பரிசு பொருள்களை வழங்கினர். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், மாநகரக் கழகத் துணைச் செயலாளர்கள் சந்திரமோகன், பகுதி கழகச் செயலாளர் ராஜ்முகம்மது, ஒன்றிய கழகச் செயலாளர் ஸ்ரீரங்கன், நெசவாளர் அணி நிர்வாகிகள் நீலமேகம், நவமணி, சுந்தர்ராஜ், சோழராசன், ரங்கசாமி, வெற்றிவேல், முத்துக்குமரன், சண்முகம், ஸ்ரீதர், பாலசுப்பிரமணியம், ஹரிபிரசாத் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சேந்தமங்கலம் (தேர்வுநிலை) பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை
ந.க.எண்.234/2023 நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT) : 2023–2024 நாள்.28.06.2023

வ.எண்	வேலையின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்	செலுத்த வேண்டிய தொகை: முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம்	ஒப்பந்தப் புள்ளி படிவம் விலை வரியுடன்	ஒப்பந்த தாரரின் தகுதி	வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்)
1.	வார்டு எண்.1,3,5,11,12 மற்றும் 13 குறுக்கு தெருக்களில் தார்சாலை சீரமைப்பு செய்தல்.	179.00	1,79,000	17700	Class-I	6 மாதங்கள்
2.	வார்டு எண்.5,8,9.10,11,12,13,14,15,16 மற்றும் 17 குறுக்கு தெருக்களில் சிமெண்ட் சாலை சீரமைப்பு செய்தல்.	110.00	1,10,000	17700	Class-I	6 மாதங்கள்

சேந்தமங்கலம் பேரூராட்சி 2023-24-ம் ஆண்டு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் (NSMT) மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two cover System) கொண்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. சேந்தமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் (பு) அவரால் அங்கீகரிக்கப்பட்டவாரம் 13.07.2023 வியாழக்கிழமை பிற்பகல் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 14.07.2023 வெள்ளிக்கிழமை மிற்பகல் 03.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும். 1. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை சேந்தமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். 2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 13.07.2023 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் அல்லது https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
செ.ம.தொ.இ./3390/ஒப்பந்தப்புள்ளி/2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்" சேந்தமங்கலம் பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டடம் (க & பரா) வட்டம், மதுரை- 625 002.
(விலை விகித முறை)
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 3 க.பா. / க (க & ப) வட்டம், மதுரை / 2023-2024 / நாள். 03.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (க & ப) வட்டம், மதுரை அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து எட்டு பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1	எட்டுப்பணிகளுக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.	
2	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள்	07.07.2023 முதல் 21.07.2023 மாலை 3.00 மணி வரை
3	ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம்	21.07.2023 மாலை 3.00 மணி வரை
4	ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	24.07.2023 காலை 11.00 மணி முதல்

கண்காணிப்புப் பொறியாளர், பொபது, கட்டடம் (க & பரா) வட்டம், மதுரை.2.
செ.ம.தொ.இ./ 3373 / ஒப்பந்தப்புள்ளி / 2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

தமிழ்நாடு அரசு
உத்தரமேரூர் சிறப்பு நிலை பேரூராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம்
ந.க.எண்.283 / 2021 / அ1 **மறுஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள். 26.06.2023

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 43.1998 மற்றும் விதிகள் 2000ன் கீழ்

காஞ்சிபுரம் மாவட்டம், உத்தரமேரூர் பேரூராட்சிக்காகவும், அதன் சார்பாகவும், 2022-2023 ஆம் ஆண்டு அம்ருத் 2.0 திட்டம் 2022-23 (AMRUT 2.0) கீழ் குடிநீர் திட்டப்பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 21.07.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் நிறைவு செய்யப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். மேலும் e-tender முறையில் https://tntenders.gov.in என்ற இணையதளத்திலும் பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 21.07.2023 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையிலும் மற்றும் https://tntenders.gov.in என்ற இணையதளத்திலும் திறக்கப்படும். இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி நகலா படிவங்கள் 21.07.2023 பிற்பகல் 3.00மணி வரை http://www.tntenders.gov.in மற்றும் www.tenders.tn.gov.in/publish என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் இப்பேரூராட்சி அலுவலகத்தில் கீழ்காணும் விவரப்படி நகலா கட்டணம் 20.07.2023 பிற்பகல் 3.00 மணிக்குள் செலுத்தி நகலா படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

வ. எண்.	பணியின் விபரம்	மதிப்பீடு (ரூ.)	முன் வைப்புத் தொகை (ரூ)	ஒப்பந்தப்புள்ளி நகலா ரூ.	பணி காலம்
1.	உத்தரமேரூர் பேரூராட்சியில் குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல்	20,90,00,000/-	20,90,000/-	16,800/-	365 நாட்கள்

செயல் அலுவலர்
செ.ம.தொ.இ./ 3393 / ஒப்பந்தப்புள்ளி / 2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்" உத்தரமேரூர் சிறப்பு நிலை பேரூராட்சி. காஞ்சிபுரம் மாவட்டம்.

தமிழ்நாடுஅரசு நெடுஞ்சாலைத்துறை
திருநெல்வேலி (நெ) நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்வட்டம்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 06 /2023–2024/வ1 / நாள். 03.07.2023

தமிழ்நாடுஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்வட்டம், திருநெல்வேலி அவர்களால் அரசு ஆணை (Ms) எண். 7 நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (EAP.II(2)) துறை, நாள். 30.01.2023 RIDF XXVIII- ன்படி நபார்டு கடனுதவியில் அனுமதிக்கப்பட்ட 2022–2023 ஆம் ஆண்டிற்கான 158 பாலங்கள் கட்டுதல் / திரும்ப கட்டுதல் திட்டத்தின் கீழ் **பரமக்குடி (நெ)** நபார்டு (ம) கிராமச்சாலைகள் கோட்டத்திற்கான ஒரு பால பணிக்கு மூடி முத்திரையிடப்பட்ட **இனவாரி விலை** ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறைமுறை இணையவழியில் மட்டுமே **10.08.2023** அன்று **15.00** மணி வரை வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், முக்கிய நிகழ்வுகளின் நேரமும் தேதியும் மற்றும் அனைத்து இதர விபரங்களும் https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் **14.07.2023** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் ஏற்படின் அவைகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./3372/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), நபார்டு (ம) கிராமச் சாலைகள்வட்டம் திருநெல்வேலி–2.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

கூடலூர் நகராட்சி – தேனி மாவட்டம்
ந.க.எண்.0926/2023/இ1 (குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு) நாள் : 04.07.2023

மாநில நிதிக்குழு திட்டம் (SFC) 2023-24–ன் திட்டத்தின் கீழ்கண்ட பணிக்கு கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்கண்ட சாலை பணிக்கு கூடலூர் நகராட்சி (தேனி மாவட்டம்) ஆணையர் மூலம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வலைத்தளத்தின் வாயிலாக இரண்டு உறை முறையில் வரவேற்கப்படுகிறது.

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீடு தொகை (இலட்சத்தில்)	ஒப்பந்தப் புள்ளி படிவம் கிடைக்கும் விபரம்	ஒப்பந்தப் புள்ளி திறப்பு விபரம்	பணி செய்து முடிக்க வேண்டிய காலம்
1.	Improvement of B.T Surface at Ambedcar colony (123021R292), ACF Colony street (123021R283), Anjalaga street (123021R284), 2E Type Colony street (123021R285), 2E Type Colony street (123021R286), 2 F Type Colony First street (123021R287), 2 F Type Colony First street 2 (123021R289) Pallivasal street 3 Unicode (123005R120), 2 G Type colony street 1 (123021R304), 2 G Type colony street 3 (123021R306), Water tank Road 9 (123010R195) and Kallar East Pudhu Street1 (123002R049) road in Gudalur Municipality.	ரூ.91.00	04.07.2023 முற்பகல் 11.00 மணி முதல்	14.07.2023 பிற்பகல் 3.30 மணிக்கு	6 மாதங்கள்

ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வு நாள் **06.07.2023 காலை 11.00** நகராட்சி அலுவலகம் கூடலூர். ஒப்பந்தப்புள்ளி விபர அட்டவணை மற்றும் நிபந்தனைகள் அடியில் கண்ட இணைய தளங்களில் **04.07.2023 பிற்பகல் 3.00 மணி** முதல் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in ஒப்பந்தப்புள்ளிகளுக்கான முன் வைப்புத்தொகை பணி மதிப்பீட்டில் 1(ஒரு) சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். மின்னணு ஒப்பந்தத்திற்கு முன்வைப்புத் தொகையை வங்கி வரைவோலையாக தனி உறையில் வைத்து ஒப்பந்தப்புள்ளி பெட்டி மூடுவதற்கு முன்பாக ஒப்பந்தபுள்ளி பெட்டியில் சமர்ப்பிக்கவேண்டும். நகராட்சி ஆணையருக்கு எந்தவித ஒப்பந்தபுள்ளியையும் ஏற்கவோ மறுக்கவோ முழு அதிகாரம் உண்டு. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக அறிவிக்கும்பட்சத்தில் அடுத்த வேலை நாளில் அதே நேரம் ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும். இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி: commr.gudalur-mdu@tn.gov.in. 04554-231236

செ.ம.தொ.இ/ 3423 /ஒப்பந்தப்புள்ளி/2023
ஆணையாளர், கூடலூர் நகராட்சி.
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

பெருநகர சென்னை மாநகராட்சி
இயந்திர பொறியியல் துறை
இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண்.சி1 / 309 / 2023 **குறுகிய கால மின்னணு ஒப்பம்**
கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

கோப்பு எண்.	பணியின் விவரம்	முன் வைப்பு தொகை
சி1/309/2023	பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 08, லாரி நிலையத்திற்கு 365 நாட்களுக்கு 18 ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவது	ரூ.72,100/-

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்: 10.07.2023 மதியம் 3.00 மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் 11.07.2023 மதியம் 3.30. மணி
மேலும் விபரங்களுக்கு:http://tntenders.gov.in

மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்)
செ.ம.தொ.இ / 3398 / ஒப்பந்தப்புள்ளி / 2023
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

ஈரோடு ஸ்மார்ட் சிட்டி லிமிடெட்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண்.இ1/444/2018 நாள்: 04.07.2023

ஈரோடு ஸ்மார்ட் சிட்டி லிமிடெட், மேலாண்மை இயக்குநர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவரால் மண்டலம்-3 பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஸ்மார்ட் ரோடு பணிகளுக்கு E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. **பணிகளின் எண்ணிக்கை-34.** இந்த பணிகளின் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை **ரூ.24.30 கோடிகள்,** ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை **https://tntenders.gov.in (E-Mail id: commr.erode@tn.gov.in. Phone No.0424-2251616)** என்ற இணையதளத்தில் மட்டும் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களையும் பெறலாம்.

ஒப்பந்தப்புள்ளி நேரம் மற்றும் நாள்:
அ) ஒப்பந்தம் குறித்த முன் கலந்தாய்வு : 13.07.2023 காலை 11.00 மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி இறக்கம் செய்தல் : 07.07.2023 முதல் 21.07.2021 வரை (3.00 P.M.)
இ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 21.07.2023 மாலை 3.00 மணி வரை
ஈ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் : **21.07.2023 மாலை 3.30 மணி**

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

மேலாண்மை இயக்குநர்,
செ.ம.தொ.இ/3394/ஒப்பந்தப்புள்ளி/2023 ஈரோடு ஸ்மார்ட் சிட்டி லிமிடெட்
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை ஒட்டி உதயா ஸ்போர்ட்ஸ் கிளப், திருச்செங்கோடு ஒன்றிய தி.மு.க. மற்றும் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. இணைந்து நடத்தும் இரண்டாம் ஆண்டு தலைவர் தங்க கோப்பை கபடி போட்டி தென்னிந்திய அளவிலான 'ஏ' கிரேடு கபடி போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், திருச்செங்கோடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவருமான எஸ்.எம்.மதுரா செந்தில், திருச்செங்கோடு ஒன்றிய கழகச் செயலாளரும், உதயா ஸ்போர்ட்ஸ் கிளப் தலைவருமான வட்டூர் ஜி.தங்கவேல், செயலாளர் ஆர்.சுரேஷ்குமார் ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே.கே. பலராமன்
ஜூலை 6 (2015)

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஒன்றியச் செயலாளராக நான்கு முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும், மாவட்டப் பொருளாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

கொருக்காத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராக நான்கு முறையும், செய்யாறு ஒன்றிய துணைத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும், ஒன்றியக்குழு உறுப்பிரானகவும் பொறுப்பு வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.